செ.வெ.எண்-02 நாள்-01.08.2018

## வருவாய் துறை சான்றிதழ்களை UMANG மொபைல் ஆப் மற்றும் பொது இணையதளம் மூலமாக விண்ணப்பிக்கலாம்

அரியலூர் மாவட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் மின்னாளுமை திட்டத்தின் கீழ் இ-சேவை மையம் வழியாக பொதுமக்களுக்கு சாதி, வருமான, இருப்பிட, முதல் பட்டதாரி சான்றிதழ் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் என்பதற்கான சான்றிதழ் ஆகிய 5 சான்றிதழ்கள் முதலில் வழங்கப்பட்டு வந்தது. பின்னர் விவசாய வருமான சான்றிதழ், சிறு, குறு விவசாயிகளுக்கான சான்றிதழ், கலப்பு திருமண சான்றிதழ், விதவைச்சான்றிதழ், வேலையின்மை சான்றிதழ், குடும்ப குடிப்பெயர்வு சான்றிதழ், கல்வி ஆவணங்கள் பேரிடரால் தொலைந்தமைக்கான சான்றிதழ், ஆண் குழந்தை இன்மை சான்றிதழ், திருமணமாகவில்லை என்பதற்கான சான்றிதழ், வாரிசு சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், செல்வநிலை சான்றிதழ், அடகு வணிகர் உரிமம், வட்டிக்கு பணம் கொடுப்போர் உரிமம், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சான்றிதழ் உள்ளிட்ட 20 வகையான சான்றுகள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இ-சேவை மையங்களில் மட்டுமில்லாமல் பொதுமக்கள் தாமாகவே ஸ்மார்ட் போன் மற்றும் இணையதளம் வழியாக சான்றிதழ்களை ’24*7 எந்த இடத்திலிருந்தும் விண்ணப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

20 வகையான வருவாய் துறை சான்றிதழ்களையும் **www.tnesevai.tn.gov.in** என்ற இணைய தளத்தில் சென்று தாமாகவே விண்ணப்பிக்கலாம். இதற்கான வழிமுறைகளை https://tnesevai.tn.gov.in/usermanual.html என்ற இணையதள முகவரியில் சென்று தெரிந்து கொள்ளலாம். மேலும், மத்திய அரசின் **UMANG** என்ற செயலியை ஆண்டிராய்டு போனில் பதிவிறக்கம் செய்து அதன் மூலம் சாதி, இருப்பிட மற்றும் வருமான சான்றிதழ் ஆகிய 3 சான்றிதழ்களை பெற பொதுமக்கள் விண்ணப்பிக்கலாம். சேவை கட்டணமாக ரூ.60/-யை இணையதள வங்கி அல்லது கிரெடிட் / டெபிட் அட்டைகள் மூலமாக செலுத்தி பொது மக்கள் அனைவரும் பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**